**செய்தி வெளியீடு எண்:1183** **நாள்:23.11.2021**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற பேரவை விதிகளுள் விதி எண் 110-இன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

"தமிழ்நாட்டில் பல கிராமங்களில் சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இறுதிப் பயணத்திலும் பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இத்தகைய சிற்றூர்களுக்கு ஊக்கத் தொகையாக வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் ரூ. 10 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படும்".

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டிலுள்ள சிற்றூர்களின் வளர்ச்சி பணிகளை மேற்கொள்வதற்கு ஊக்கத் தொகையாக முதற்கட்டமாக ஒரு மாவட்டத்திற்கு 3 சிற்றூர்கள் வீதம் 37 மாவட்டங்களிலுள்ள 111 சிற்றூர்களுக்கு தலா ரூ.10,00,000/- வீதம் மொத்தம் ரூபாய் 11 கோடியே 10 இலட்சம் பரிசுத்தொகை வழங்கிட ஏதுவாக நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை (நிலை) எண்.93, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(நிஎ2(2)த்துறை, நாள். 23.11.2021 -இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

க. மணிவாசன்,
அரசு முதன்மை செயலாளர் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**